தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 29-9-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் நாட்டு நலப்பணித்திட்ட நாள் விழா நடைபெற்றது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் நாட்டு நலப்பணித்திட்ட நாள் கடந்த 27-9-2014 அன்று பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் நடைபெற்றது.

இந்த விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தா் முனைவா் கு. இராமசாமி முதலாம் ஆண்டு நாட்டு நலப்பணித்திட்ட மாணவா்களால் உருவாக்கப்பட்ட நாட்டு நலப்பணித்திட்ட வலைப்பூவை Blog (tnau.nss.blogspot.in) தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினாா்.

கண்தான விழிப்புணா்வு பற்றிய தலைப்பில் சங்கரா மருத்துவமனை மருத்துவா் ஆதித்யா சிறப்புரை ஆற்றினாா். அவா் தமது உரையில் கண்தான மருத்துவ, சட்ட செய்திகளை பற்றிய கருத்தக்களை மாணவ மாணவியா்கள் அறிந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினாா். மேலும் அண்மையில் நடைபெற்ற நாட்டுநலப்பணித்திட்ட சிறப்பு முகாமில் சிறப்பாக செயலாற்றிய மாணவ-மாணவியா்களுக்கு சானிறிதழ்களை வழங்கினாா். சிம்லாவில் உள்ள அடல்பிகாரி வாஜ்பாய் மலையேற்ற பயிற்சி நிறுவனத்தின் சாா்பில் நடைபெற்ற மலையேற்ற பயிற்சி முகாமில் கலந்து கொண்ட மாணவ-மாணவியா்களுக்கு சான்றிதழ்களை வழங்கினாா்.

இந்த விழாவில் முதன்மையா் வேளாண்மை முனைவா் ச. மகிமைராஜா முதன்மையா் வேளாண் பொறியியல் முனைவா் டி. திவாகா் துரைராஜ், நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளா் முனைவா் க. குமுதா, நாட்டு நலப்பணித்திட்ட அலுவலா்கள் முனைவா் இரா. பாவேந்தன், முனைவா் எஸ். வரதராஜ், முனைவா் சி. வள்ளியம்மை, முனைவா் மா.ரா. லதா, முனைவா் ஹேமபிரபா உள்ளிட்டோா் கலந்து கொண்டனா், நாட்டு நலப்பணித்திட்ட மாணவி பிருந்தி வரவேற்றாா்.

மாணவி ஹரிணி நன்றியுரை ஆற்றினாா். தொடா்ந்து மாணவா்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மக்கள் தொடா்பு அலுவலா்